HOTEL GNANAMS
Coffee Shop
Ex Lunch with Soups and Sweets 28/-
BAR
BEER 30/- V.S O.A. 7/50
OLD ARRACK 6/50
Also:
Chinese Meals and Soup 25/- to 40/-

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

LIFE IS MADE FOR LIVING
Hotel Gnanams
* Green Chinese Restaurant. (Excellent Food)
* Capri BAR and BEER GARDEN
* Coffee Shop
* A/C or non A/C Rooms
Tele: 22088 28067

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ ஆனி மீ 13 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 18 (27-06 1986) UTHAYAN: A LIVELY TAMIL DAILY கதிர்: 189

## மாகாணசபை யோசனை:

# விடுதலை அமைப்புகள் நிராகரித்தன

## தமிழர் அபிலாஷைகளை எவ்வகையிலும் பூர்த்திசெய்யவில்லை

சென்னை, ஜூன் 26

இலங்கையில் ஒன்பது மாகாண சபைகளை நிறுவும் அரசாங்கத்தின் புதிய யோசனைகளை, தமிழர் விடுதலை அமைப்புகள் நிராகரித்து விட்டன.

புதிய யோசனைகள் இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்த வகையிலும் பூர்த்தி செய்யவில்லை—

தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளைக் கூட புதிய யோசனைகள் நிறைவேற்றுவதாக இல்லை—

இவ்வாறு விடுதலை இயக்கங்கள் கருத்துத் தெரிவித்துப் புதிய யோசனைகளை நிராகரித்ததாக அறியவந்தது.

விடுதலை இயக்கங்களை இணை அமைச்சர் திரு பி. சிதம்பரம் சந்தித்த போது இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது

தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்படும் வரை இலங்கை அரசாங்கத்துடன் எவ்வித பேச்சுவார்த்தைக்கோ அல்லது போர் நிறுத்தத்துக்கோ இணங்க முடியாது என்றும் விடுதலை இயக்கங்கள் தெரிவித்ததாக அறியவந்தது

தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தைக் காப்பாற்றுவதற்கு உகந்த திட்டம் எதற்கும் குறைந்ததையும் பரிசீலனை செய்யும் நிலையில் இல்லை என்றும் அவை அமைச்சர் சிதம்பரத்திடம் தெரிவித்தனவாம்-

சட்டம், ஒழுங்கு குடியேற்றம் ஆகியன சம்பந்தமான யோசனைகள் ஏற்கமுடியாதவை என்றும் இயக்கங்கள் சுட்டிக் காட்டினவாம்.

(அ)




அப்ப சண்டையும் நிக்காது; சமாதானமும் வராது எண்டு சொல்லுங்கோ பின்னை...!

### துண்டுப் பிரசுரம் வாசித்த மூவர் கைது

கொழும்பு, ஜூன் 27

தமிழீழம் பற்றிய துண்டுப் பிரசுரங்களை வாசித்துக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்ட 3 தமிழ்த் தொழிலாளர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பிலுள்ள அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்களான இவர்களின் பெயர்கள் வருமாறு:

கே வேலாயுதம், ஏ பாலையா, பி. செல்வத்துரை

கூட்டுத்தாபன வளவுக்குள் ஈழம் பிரசுரங்களை படித்துக் கொண்டு இருக்கையில் கூட்டுத்தாபன பாதுகாப்பு அதிகாரியினால் கைது செய்யப்பட்டனர்.

கோட்டை நீதிவான் திரு குயின்டஸ் பெரேரா ஜூன் 30 வரை சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (இ-எ)

## இ.தொ.கா அலுவலகம் அருகில்குண்டுவெடிப்பு

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் உள்ள கால்வாயினுள் குண்டு ஒன்று நேற்று இரவு 8 மணியளவில் வெடித்தது.

இச்சம்பவத்தில், அச்சமயம் வீதியால் சென்று கொண்டிருந்த ஒரு சிங்களவர் படுகாயம் அடைந்தார். 5 பேர் வரையில் சிறுகாயங்களுக்கு ஆளாகினர்.

(இ-எ-2)

### சுபநேரம்

27—6—1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:-
5 55 முதல் 7.25 வரை
ராகுகாலம்:-
10 25 முதல் 11.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நேற்றுக் காலை யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கூடிய நூற்றுக்கணக்கான முஸ்லிம் பெண்கள், ஆண்கள் உட்பட பலர் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஊர்வலமொன்றை நடத்தினர்.

மூன்று மரணங்களுக்கும் காரணமான 15க்கும் மேற்பட்டவர்களை விசாரித்து தீர்ப்பு வழங்கவென நேற்றுக் காலை 9 45 மணிக்கு முஸ்லிம் மக்களைக் கூடுமாறு விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

தீர்ப்பு வழங்கத் தாமதம் ஏற்பட்டதாலேயே ஆர்ப்பாட்டம் தொடக்கப்பட்டது.

ஊர்வலத்தில் பல சுலோகங்கள் ஒலிக்கப்பட்டதுடன், பல சுலோக அட்டைகளும் பலரால் ஏந்திச் செல்லப்பட்டன.

"குற்றவாளிகளை மக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம்கள் மூவர் கொலை:

## புலிகளால் ஒருவருக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடந்த செவ்வாய்க்கிழமை காலை யாழ். முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதம் காரணமாக சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து விசாரணை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கியிருப்பதாக நேற்றுத் தெரிவித்தனர்

வெள்ளை என அழைக்கப்படும் ஜவாத் என்பவருக்கே மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தீர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

உணர்ச்சி வசப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு மரணங்கள் கொலை எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

குருநகர் கடற்றொழிலாளர் மரணவிசாரணையின் முடிவில் முப்பது பேரின் மரணங்களும் கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய ஒருவரின் மரணம் தொடர்பாக பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

யாழ் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் வியாழன் காலை மரண விசாரணை நடத்திய யாழ் நீதிவான் திரு கே பி. எஸ் வரதராசா இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்.

முப்பது பேரின் மரணங்கள் தொடர்பாக மேலும் புலன் விசாரணைகளை நடத்தி உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் யாழ் நீதிவான் திரு வரதராசா பொலீசாருக்குப் பணிப்புரை வழங்கினார்.

சட்டத்தரணிகள் திரு. இராஜா விசுவநாதன், திரு. பா. தவபாலன் ஆகியோர் மரணமடைந்தவர்களின் நலனைக் கவனித்தார்கள்.

பிலிப் ரேமன், அன்னலிங்கம் சற்குணம், மருத்துவப் பேராசிரியர் டாக்டர் சரவணபவானந்தன், யாழ் அரசினர் ஆஸ்பத்திரியைச் சார்ந்த டாக்டர் பஸ்தியாம்பிள்ளை ஈஸ்வரராஜ், டாக்டர் சுப்பிரமணியம் ரவிராஜ் ஆகியோரும் இம் மரண விசாரணையில் சாட்சியம் அளித்தனர்.

காணாமல் போன ஞானப்பிரகாசம் அன்ரனி ரேமன் தொடர்பாகவே பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(இ-9)

# கிளிநொச்சி அரச அலுவலகங்கள் பரந்தனுக்கு மாறும்

## தபாலகத்தில் இராணுவம்?

— அலுவலகச் செய்தியாளர்: பி வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜூன் 27

கிளிநொச்சி ஆயுதப்படை முகாமிற்கு அருகில் உள்ள சகல அரச திணைக்களங்களும் பரந்தனுக்கு இடம்மாற்றப்படும்.

கொழும்பில் உள்ள நம்பிக்கையான அரசாங்க வட்டாரங்களில் இருந்து இது தெரிய வருகின்றது.

கிளிநொச்சியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடரும் வரை அரச செயலகம் மற்றும் அரச அலுவலகங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாக உள்நாட்டு அமைச்சு அதிகாரிகளுக்கு, கிளிநொச்சி அரச அதிபர் என். ஜெயநாதன் தொலைபேசிமூலம் அறிவித்திருந்தார்.

அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்ல பின்னிற்பதே இதற்குக் காரணம் என்றும் மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி ஆயுதப் படை முகாமுக்கு அரு

(4-ஆம் பக்கம் பார்க்க)

### 900 தமிழர்களுடன்

## பூஸா சென்ற கப்பல் நடுக்கடலில் திருப்பப்பட்டது!

—திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை ஜூன் 27

பூஸாவுக்குக் கப்பலில் கொண்டு செல்லப்பட்ட திருகோணமலை நகரில் கைதான சுமார் 900 தமிழர்களும் மேலிடத்தின் உத்தரவைத் தொடர்ந்து நேற்றுக் காலை மீண்டும் திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இரவு முழுவதும் கப்பல் மேலிட உத்தரவின் மீது பூஸா போகாமல் நடுக்கடலில் நிறுத்தப்பட்டிருந்தது

திருகோணமலைப் பிரசைகள் குழு அமைச்சர் தொண்டமானுடன் தொடர்பு கொண்டு 900 தமிழர் வரை விசாரணை இன்றி பூஸாவுக்கு கப்பலில் கொண்டு போகப் படுகின்றனர் என்ற விஷயத்தைத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து அமைச்சர் தொண்டமான் கொழும்பில் அரச உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டார்.

இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட தமிழர்களை கப்பலில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளுக்கு புலிகள் உரிமை

யாழ்ப்பாணம்,ஜூன் 27

புதன்கிழமை நிகழ்ந்த இரண்டு கண்ணி வெடித் தாக்குதல்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உரிமை கோரியிருக்கிறது

தாம் நடத்திய சேருநுவர, ஒலுக்குளம் கண்ணி வெடித் தாக்குதல்களில் 54 பேர் உயிரிழந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதன்கிழமை காலை மூதூர் மாவட்டத்தில் சேருநுவரவில் ஒரு ஈ. எல் எவ் டிரக்கில் ஊர்காவல் படையினரும், சிங்களவரும் போய்க்கொண்டிருந்த சமயம் எமது வீரர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## யார் நிராகரிப்பினும் மாகாணசபை யோசனையை நிறைவேற்றியே தீருவோம் - ஜே. ஆர்.

கொழும்பு, ஜூன் 27

யார் ஏற்றால் என்ன, ஏற்காவிட்டால் என்ன, அரசாங்க நாடாளுமன்றக் குழு ஏற்றால் மாகாண சபை யோசனைகள் நிறைவேற்றப்படும்.

ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் மாகாணசபைகளை நிறுவும் நகல் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எமது யோசனைகளில் தெரிவிக்கப்பட்டதை விட கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டும் என அரசியல் கட்சிகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டால் அவை பரிசீலனை செய்யப்படும்

ஆனால் அதிகாரங்களைக் குறைக்குமாறு கேட்கும் எவரது கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அவர் தெரிவித்த முக்கிய தகவல்கள் வருமாறு:-

* மாகாண சபைகள் சமஷ்டி அமைப்புக்கள் அல்ல அவை ஒற்றையாட்சிக்குட்பட்டவை. ஆனால் இம்முறை தான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மோதல் பல சிப்பாய்கள் பலி?

### புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

திருமலைப் பகுதியில் நேற்று நிகழ்ந்த மோதல்களில் 10 இராணுவத்தினரும் சில சறுப்புச் சட்டைக்காரர்களும் பலியானதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்றுக் காலை மூன்றும் கட்டை (உப்பு வெளி முகாமில் இருந்தும் இறக்கக்கண்டி முகாமில் இருந்தும் தமிழ் பேசும் மக்களை வேட்டையாடுவதற்காக நடைபவனியாக இராணுவத்தினர் வந்த போது முறையே அல்லைத் தோட்டத்திலும், ஆறும் கட்டையிலும் வைத்து எமது வீரர்கள் நேரடியாக மோதியதில் 10 இராணுவத்தினர் வரையில் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

மேலும் இராணுவம் தனது இழப்புகளுடன் பின்வாங்கியது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது எமது தரப்பில் செல்வம் வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீர அஞ்சலிகள். இத் தாக்குதல் அதிகாலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடந்தது.

பிற்பகல் 2 மணியளவில் மிருந்தபுரத்தில் இருந்தும் கால்நடையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தீவிரவாதிகள் இலட்சியவாதிகள்

### சந்திரிகா புகழாரம்

சென்னை, ஜூன் 26

தமிழ் தீவிரவாதிகள் பெரும் இலட்சியவாதிகள் தமது இலட்சியத்திற்காகச் செயல்படுபவர்கள்.

இலங்கை அரசு கூறிய மாதிரி அவர்கள் இல்லை. அவர்கள் நல்லவர்களும் கூட.

இப்படி இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்காவின் மனைவி திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க தெரிவித்தார்

'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் திருமதி விஜயகுமாரணதுங்க இத்தகவலை வெளியிட்டார்.

திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இரண்டாவது புதல்வி.

கணவருடன் தமிழ் நாடு சென்றிருந்த அவர் "தீவிரவாதிகளுடன் பேசினோம். அவர்களின் தேவை என்ன என்பதையும் புரிந்து கொண்டோம்"—என்று சொன்னார்.

அடுத்தமுறை தமிழ் நாடு செல்ல உள்ள திரு. விஜயகுமாரணதுங்க,புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியையும் சந்திக்க இருக்கிறார்.

(இ-எ-2)

## ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் இனி செப்டம்பரில்?

கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ரஷ்ய விஜயம் செப்டம்பரில் இடம்பெறலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் ஜனாதிபதி ஜூனில் மேற்கொள்ளவிருந்த ரஷ்ய விஜயம் ஏன் ரத்துச் செய்யப்பட்டது என்பது பற்றிய விளக்க அறிக்கை ஒன்று அரசாங்கத்தினால் இந்த மாத முடிவினுள் வெளியிடப்படும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-2)

### துப்பாக்கிகள் அபகரிப்பு

கொழும்பு, ஜூன் 27

மூதூர்த் தொகுதியில் கடந்த சில தினங்களில் மட்டும் ஊர்காவல் படையினரிடமிருந்து 34 துப்பாக்கிகளை தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

183 ரவைகளும் தீவிரவாதிகளினால் கைப்பற்றப்பட்டன. (இ-எ-2)

இளைய தலைமுறையின் இதயமாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை ஊழியர் பெரும் அவதி

யாழ்ப்பாணம்,ஜூன் 27
திருகோணமலைமாவட்டத்தில் கடமைபுரியும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர் கள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு சிலர் வேலைக்குத் திரும்பிய போதிலும் 40 பேர்வரை இன்னும் யாழ் செயலகத்திலேயே தங்கள் தினவரவுப்பதிவை இட்டு வருகிறார்கள்.

போக்குவரத்துப் பாதுகாப்பின்மையே இவர்களது தாமதத்துக்குக் கான காரணம். இவர்களில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் வேலைசெய்பவர்களுக்கு, தாமாகவே வேலையிலிருந்து விலகிக் கொண்டதாக கடிதங்கள் வந்துள்ளன என்றும் தெரியவருகிறது.

(இ-5)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
திரும்பிச் செல்ல முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் திருமலையில் கடமையாற்றும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் கூட்டம் ஒன்று யாழ் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த நடவடிக்கை என்ன எடுப்பது என்பது பற்றி கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

திருமலையில் கடமை புரியும் சுமார் 150 அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் யாழ் மாவட்டத்தில் தங்கி நிற்கின்றனர்.

(இ-ஈ)

## கோகிலாவின் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 27
கோகிலா மகேந்திரனின் இரு நூல்களின் அறிமுகவிழா ஜூன் 29 ஞாயிறு பிற்பகல் நல்லூர் இந்துவிடுதி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில் இந்த நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

செம்பியன் செல்வன் தலைமைவகிப்பார்.

'பிரசவங்கள்' சிறுகதைத் தொகுதியைப் பற்றிய ஆய்வுரைகளை திரு. கனகசபாபதி நாகேஸ்வரன், திரு சு. இராசநாயகம் நிகழ்த்துவர்.

'துயிலும் ஒரு நாள் கலையும்' என்ற நாவல் பற்றிய ஆய்வுரைகளை திருமதி சித்திரலேகா மௌனகுரு, செங்கை ஆழியான் நிகழ்த்துவார்.

நூலாசிரியைகோகிலா மகேந்திரன் பதிலுரை நிகழ்த்துவார் இணைச் செயலாளர் திரு. ச. பத்மநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

(இ-ஈ)

## எரிந்து போன யாழ் ஐக்கிய வியாபார சங்கத்துக்கு எத்தகைய நஷ்ட ஈடும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கத்துக்குத் தீயினால் ஏற்பட்ட இழப்புக்கு காப்புறுதிக்கூட்டுத்தாபனம் நஷ்ட ஈடுதர மறுத்துள்ளது ஜனாதிபதி நிதியிலிருந்து கோரப்பட்ட நிவாரணம் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க நடப்பு வருட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

9-4-84 இல் ஏற்பட்ட தீயினால் கம்பனிக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூ 14, 4, 71, 325/

குறித்த தீயினால் கம்பனியின் பிரதான தலைமை அலுவலகம், பலபகுதி களஞ்சியம், மொத்த விற்பனைப் பகுதி, சிகரட் பகுதி, புடைவைப்பகுதி, மருந்துப்பகுதி, லொத்தர் விற்பனைப் பகுதி, சிற்றுண்டிப்பகுதி ஆகியவை முற்றாகவும், மோட்டார் பிரிவில் ஒரு பகுதியும் அழிந்துவிட்டன

கையிருப்பினில் இருந்த சரக்குகளுக்கு ஏற்பட்ட அழிவினால் ரூ 7,3,20,000 நஷ்டம் ஏற்பட்டது. மேலும் திரும்பத் திரும்ப இடம்பெற்ற கொள்ளைகளும், வழிமறிக் கொள்ளைகளும் மேலதிக நட்டத்தை ஏற்படுத்தி உள்ளன.

இவ்வாறும் இச்சங்கத்தின் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-9)


## Uduvil Girls' College

**DATA PROCESSING & COMPUTER PROGRAMMING**

Starts on 07 - 07 - 1986

Practicals and Theory during Week-days from 9.00 a.m: 3.00 p.m.

**MODULES:**

(i) Introduction to Computing
(ii) Gates Theory & Algorithms
(iii) BASIC Programming & Assembler-Language

Note: COBOL Programming on Radio Shack

Starts: 07 - 07 - 1986

REGISTRATION before: **4-7-1986**

DIRECTOR.



## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மனி
- பிரான்ஸ்
- டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்
பாஸ்போட், விசா, பொண்ட் (Bond) டிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

கொழும்பு — டென்மார்க் நேரடிப் பயண ஒழுங்குகள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியு.
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.


## கிளிநொச்சி அரச ஊழியர் இக்கட்டான நிலை

கிளிநொச்சி, ஜூன் 27
கிளிநொச்சி நகரத்திலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களுக்குச் செல்வதற்காக பரந்தன் வந்த சமயம் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இராணுவம் வீதிக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனால் இவர்கள் சம்பளம் எடுக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது.

(இ-76)

## செயற்கை மரணங்கள் நிறுத்தப்படும்வரை சந்தித்து பேச முடியாது

### மகாத்மா வழிஅமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27
நாட்டில் செயற்கை மரணங்கள் நிறுத்தப்படும்வரை எந்த கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்ள முடியாது என்று மகாத்மா வழி இயக்கம் தேசியப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பு, விலாசத்தில் இயங்கும் மகாத்மா வழி அமைப்பு தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச அனுமதிகோரியிருந்தது.

மகாத்மாவழிஅமைப்பு இது குறித்து அனுப்பிய கடிதத்தை ஜனாதிபதி அலுவலகம் தேசிய பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

இதைத் தொடர்ந்து ஜூன் 24 காலை தேசிய பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் தன்னைச் சந்திக்கும்படி மகாத்மா வழி அமைப்பை, அமைச்சுச் செயலாளர் கேட்டு இருந்தார்.

அந்தக் கடிதத்திற்கு பதில் விக்கையில்தான் செயற்கை மரணங்கள் நிறுத்தப்படும்வரை எந்தக் கலந்துரையாடலுக்கும் வரமுடியாது என்று மகாத்மா வழி அமைப்பு தற்பொழுது அறிவித்துள்ளது.

(இ-எ)

## சர்வதேச சட்டத்துக்கு மாறுகஆயுதப்படையினர்; ஐ.நா.வில் குரல் எழுப்ப வேண்டும்

### குருநகர் அஞ்சலிககூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 27
சர்வதேச சட்டத்துக்கு மாறுக எமது நாட்டில் ஆயுதப்படைகளின் நடவடிக்கை இருக்கின்றன அரசாங்கம் இது பற்றி கவனிப்பதில்லை.

ஆகவே அரசு கவனிக்காத இந்நிலையில் எமது குரலை ஐ நா. சபைக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

யாழ் பேராயர் பங்கு தந்தை ஜெயசீலன் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

மண்டைதீவுக் கடலில் கோரகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் அஞ்சலிக் கூட்டம் குருநகர் கலையரங்க முன்றலில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

மீனவர்கள் கொடூரமாக கொலைசெய்யப்பட்டதை அறிந்ததும் நாம் இதுபற்றி அரசாங்கத்தின் மேலிடத்துடன் தொடர்பு கொண்டோம்.

அச்சமயம் அவர்கள் பதில் எம்மை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர்கள் கூறியது மீனவர்கள் கொலைக்கு பயங்கரவாதிகளே காரணம் என்பதாகும்

பரம்பரையாக தொழில் செய்த மீனவர்கள் இன்று தமது தொழிலை இழந்தது மட்டுமல்ல அரசாங்கத்தின் கொடூர செயலுக்கும் பலியாகி வருகிறார்கள்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் மாநகர முன்னாள் பிதா இராசா விசுவநாதன் பேசுகையில் இராணுவம் மூலம் நசுக்க முடியாது என்பதனாலேயே பொருளாதாரம் மூலம் தமிழ்மக்களை நசுக்க அரசு ஆரம்பித்துள்ளது என்றார்.

செல்வி தங்கமா அப்பாக்குட்டி பேசுகையில் பொதுவுடைமை நாடான ரஷ்யாவில்கூட மதஸ்தாபனங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் நமது நாட்டில் ஆலயங்கள் இடிக்கப்படுகின்றன. அத்துடன் குருமாரும் சுடப்படுகின்றார்கள் என்றார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த ஜெபநேசன் அடிகளாரால் இறந்தவர்களுக்கு திருப்பலிபூசை ஒப்புக்கொள்ளப்பட்டது

(இ-6)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## ஷேக்ஸ்பியர் நாடக போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 27
யாழ் வை. எம். சீ ஏ யால் யாழ் லயன்ஸ் கழக ஆதரவுடன் நடத்தப்படும் ஷேக்ஸ்பியர் நாடகப்போட்டி சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் 28ஆம் திகதி நடைபெறும்.


உடுவில் மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவர்களால் 'ஹம்லெற்) 'குவல்த் நயிற்',, 'ரோமியோ அன் ஜூலியற்' நாடகங்களின் முக்கிய காட்சிகள் நடிக்கப்படும்.

இத்துடன் தனிநடிப்பு பேச்சுப்போட்டி என்பவற்றில் முதற்பரிசு பெற்றவர்களின் நிகழ்ச்சிகளும் உண்டு.

காலை 9 மணிக்கு நாடகப் போட்டி ஆரம்பமாகும்.

(இ)

## மக்கள் முகம்



## ஆனைப்பந்தி பி. வி. சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம் ஜூன் 26
ஆனைப்பந்தி மெதஸ்டிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றன.

தலைவர். திரு. ச. கைலாயபிள்ளை (அதிபர்) செயலாளர். திரு க. இராஜேந்திரன், பொருளாளர். திருமதி. பி அன்ரனி கணக்காய்வாளர். திரு. வி ஜி. ஜேமூர்த்தி உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கவாசகர், ரி. உலோகநாதபிள்ளை, கே. நடேசன்

திருமதிகள். எஸ். பத்மநாதன் பி. பரமலிங்கம் எஸ். இராஜேஸ்வரி.

(இ)

## தவில் நாதஸ்வர கலைக்கு பல்கலைக்கழகத்தில் தனித்துறை

### அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன்27
தவில், நாதஸ்வரக் கலைக்கு என்று பல்கலைக்கழகத்தில் ஒரு துறை உருவாக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று யாழ் அரச அதிபர் திரு. வை. மு பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட கலாசார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைத்து அரச அதிபர், துணைவேந்தர் பேராசிரியர் எஸ் வித்தியானந்தனுக்கு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அண்மையில் நடந்த இக்கூட்டத்தில் தவில்—நாதஸ்வரத் துறையினர் அனுப்பிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நாதஸ்வர-தவில் கலைக் கல்லூரி அமைத்தல், அகற்கு இந்திய ஆசிரியர்களை வரவழைத்தல், வறுமை நிலையில் வாழும் பழம்பெரும் கலைஞர்களுக்கு நஷ்ட நிவாரணம் வழங்கல், கலைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி இக் கலைச் சிறப்பினைப் பரப்புதல், இசைக் கருவிகளை இறக்குமதி செய்தல், இசைக் கருவி உபகரணங்களைக் கொண்ட ஒரு கைத்தொழிற்சாலையை உருவாக்குதல், கலைக்கூடம் அமைத்தல், கலைஞர்களைக் கௌரவித்தல், ஆராய்ச்சி நூல் வெளியிடுதல் ஆகியன அக் கோரிக்கைகளில் அடங்கியிருந்தன.

(உ-எ)

## சு. க. குழு ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஜூன் 27
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவை புதன் மாலை சந்தித்தது

தூதுக்குழுவுக்கு கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார் திரு மைத்திரிபால சேனநாயக்காவும் தூதுக்குழுவில் அங்கம் வகித்தார்

சர்வகட்சி மாநாட்டில் வழங்கப்பட்ட 30 பக்க புதிய யோசனைகள் அறிக்கையை ஜனாதிபதி தூதுக் குழுவுக்கு வழங்கினார்.

அதில் உள்ள முக்கிய விடயங்கள் குறித்து இரு சாராரும் சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினர்

தூதுக்குழு மீண்டும் ஒரு தினத்தில் ஜனாதிபதியைச் சந்திக்கும்.

(அ)

## நிதிசேகரிப்பு நீடிப்பு

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக யாழ் பல்கலைக் கழக மாணவர் அவை ஏற்பாடு செய்திருக்கும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அவை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்று பாடசாலைகளில் நிதி சேகரிக்கப்படும் என்றும் மாணவர்கள் முன் கூட்டியே நிதியைச் சேர்த்துத் தமது பாடசாலைகளுக்கு வரும் மாணவர் அவைப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கும்படியும் அறிக்கையில் கேட்கப்பட்டிருக்கிறது

(உ)

## செங்கலடி புதிய தபாலகம்

மட்டக்களப்பு ஜூன் 27
செங்கலடி தபால் அலுவலகம் புதிய சொந்த இரண்டு மாடிக் கட்டடத்துக்கு இடம் மாறுகிறது.

புதிய கட்டடத்துக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்கு இடையில் தபால் அலுவலகம் இடம்மாறும் என்று செங்கலடி தபால் நிலைய அதிபர் திரு எஸ் தர்மராஜன் தெரிவித்தார்.

புதிய கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு அயராத முயற்சிகள் எடுத்ததற்காக மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. கா. கனகசுந்தரத்தை செங்கலடி தபால் நிலைய அதிபர் திரு. தர்மராஜன் பாராட்டினார்.

(இ-எ)

## தோலகட்டி சம்பவத்துக்கு கண்டனம்

யாழ்ப்பாணம் ஜூன் 27
தோலகட்டி புனித ஆச்சிரமத்துக்குள் இராணுவத்தினர் சென்று அங்கிருந்து குருவானவரையும் ஏனைய இரு தொண்டர்களையும் விசாரித்து அவமானப்படுத்தியது - துறவியை மார்பிலே சுட்டு துடிக்க துடிக்கக் கொன்றது— ஆகிய சம்பவங்களை மல்லாகம் பிரஜைகள் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பிரஜைகள் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி சிவ. சிறிதரன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. [illegible]

உண்மை நிலையை விளக்கி ஜனாதிபதிக்கும், சகல தூதரகங்களுக்கும், ஆயர் மன்றத் தலைவர்களுக்கும் மகஜர் அனுப்புவது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(இ-10)

## தமிழிசை கச்சேரி

யாழ்ப்பாணம்,ஜூன்.27
நாவலர் சபையின் ஆதரவில் ஜூன் 28 சனிக்கிழமை மாலை இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் தமிழிசைக் கச்சேரி நடைபெறும்.

மாதாந்த கலாசார நிகழ்ச்சித் தொடரின் முதல் நிகழ்ச்சியாக இந்த இசைக்கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ-எ)


## தேவை

உதவியாளர் பெண்கள்

தொழிற்சாலையொன்றில் வேலை செய்வதற்கு 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு வெற்றிடமுள்ளது. சுண்டுக்குளியிலிருந்து ஒரு மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக 28.6.86 சனிக்கிழமை காலை 9-11 மணிக்கிடையில் நேரில் வரவும். dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி.


## சுமுகமான சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக இடமாற்றம்

### தீவுப்பகுதியில் கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 27
தீவுப்பகுதிக்கு பயணம் செய்யக்கூடியதான சுமுக சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக இடமாற்றஞ் செய்யும்படி தீவுப்பகுதிப் பாடசாலைகளில் பணியாற்றும் வெளியூர் ஆசிரியர் [illegible] அமைப்பு கல்வி அமைச்சைக் கோரியுள்ளது

அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் அந்த அமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டில் [illegible] காரணமாக தீவுப்பகுதிக்கு பயணம் செய்வது மிகவும் கஷ்டமான காரியம்.

குறைந்த வருமானத்தில் பெருந்தொகையை பயணஞ் செய்வதற்குச் செலவழித்து, உயிரைப் பணயம் வைத்தே தீவுப்பகுதிக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இப்படி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்[illegible]யில் அந்த அமைப்புக் கூறியுள்ளது.

(இ-எ-5)


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- சவூதி அரேபியா

(அ) கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 5ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

(ஆ) டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

(இ) சவூதி அரேபியாவுக்கு (Labours) தொழிலாளர்கள் உடன் தேவை. செல்ல விரும்புவோர் 5ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டு வந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக் கொள்ளவும்.

(ஈ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பில் இருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;

**N. BALA**

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பிற்குறிப்பு: பஸ் வழி இல:(764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.


புதுப்பொலிவுடன் விளம்பரம் செய்ய உதயனை நாடுங்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

எவனிடம் ஒழுக்கம் இல்லையோ
அவனுக்கு கல்வியே இல்லை
(- நபி ஸல்)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல, 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 27-06-86 தொலைபேசி 24805 22073 த. பெ 23

## சமூக வைத்தியத் திட்டம்

நீரிழிவு நோய்க்கு இலவச சிகிச்சை அளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மானிப்பாயில் நாளை சனிக்கிழமை பிரஸ்தாப இலவச முகாமை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் முன்வந்திருக்கின்றது

நோய்க்குச் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமன்றி, அந்த நோய் கண்டிருக்கிறதா என்பதனை அறியப் பரிசோதனையும் இலவசமாக நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முயற்சியும், சேவையும் பாராட்டத்தக்கவை, நோய் வருவதற்கு முன் அது வராமல் தடுப்பதே எல்லா வகைகளாலும் சிறந்தது. அதற்கான ஒரு திட்டம் குறித்து லயன்ஸ் போன்ற சமூக நலன் இயக்கங்கள் கருத்தில் கொள்வது நல்லது

நோயற்ற வாழ்வு தான் குறைவற்ற செல்வம். ஆனால் நோய் இல்லாதவர் நூறில் ஒரு சதவீதமானோர் கூட உலகில் இல்லை.

மக்களுக்கு நோய் வராமல் தடுப்பதற்கு முன்னேற்பாடுகள் செய்தால் நோயுள்ளோர் எண்ணிக்கையை ஓரளவாவது குறைக்கலாம்.

ஒவ்வொருவருக்கும் உடல்நிலைப் பகுப்பாய்வு அட்டவணை வைக்க வசதி செய்வதும் அதற்கு ஒரு வழி.

அதாவது நோய் வந்த பிறகு பரிசோதனை செய்வதற்குப் பதில் அதற்கு முன் பரிசோதனை செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வயதிலிருந்து, உதாரணமாக ஆகக் குறைந்தது பதினைந்து வயதிலிருந்தாவது வருடாந்த வைத்திய சோதனை செய்து, ஒருவரது உடல்நிலை பகுப்பாய்வு அட்டவணை தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதின் மூலம் நோயைத் தடுக்கவும், தவிர்க்கவும் ஏதுவாகும். ஒருவர் தமது உடல் நிலைக்கு ஏற்ப உணவு வகைகளை உட்கொண்டும், உணவுப் பழக்கங்களை மாற்றி அமைத்தும், தேகாப்பியாசங்களைச் செய்தும் நோயைத் தூரத்தே வைக்கலாம்.

சகல மக்களுக்கும் வருடாந்த வைத்திய பரிசோதனை நடத்தி உடல்நிலைப் பகுப்பாய்வு அட்டவணை வழங்கும் முறை பல மேலை நாடுகளில் உள்ளது.

அதனால் நோய் வருவதைத் தடுக்கவும், நோய் கண்டவுடன் தகுந்த வைத்தியம் செய்யவும் பேருதவியாக இருக்கும்.

இலங்கை அரசாங்கம் இவ்வாறான ஒரு திட்டத்தைச் செயற்படுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை ஆகையால் லயன்ஸ், றோட்டரி போன்ற சர்வதேச சமூக நலன் இயக்கங்கள் இப்பணியை மேற்கொள்வது குறித்து கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வியாதிக்கும் தனிச் சிகிச்சை நிலையங்களை வைப்பதற்குப் பதில் இப்படி ஒரு பாரிய திட்டத்தைச் செயற்படுத்தினால் அதனால் சமூகம் பெருமளவில், பரந்த அளவில் நன்மை பெறும். அதாவது சமூக வைத்திய நலன் திட்டத்தை விஸ்தரிப்பது குறித்து மேற்படி இயக்கங்கள் கவனம் செலுத்துவது சிறப்புச் சேவையாக இருக்கும்.

# நிக்கரகுவாவின் கிளர்ச்சியாளருக்கு அமெ. ராணுவ உதவி

வாஷிங்டன், ஜூன் 26

சட்டபூர்வமான நிக்கரகுவா அரசுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு அமெரிக்க அரசு 10 கோடி டாலர் பெறுமதியான இராணுவ உதவியை வழங்க உள்ளது.

இதற்கான அனுமதியைஅமெரிக்க நாடாளுமன்றம் கடந்த வியாழக்கிழமை வழங்கியது.

கிளர்ச்சிப் படைகளுக்கு இராணுவ உதவி வழங்கவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதியின் கோரிக்கைக்கு ஆதரவாக 221 வாக்குகள் கிடைத்தன எதிர்த்து 209 வாக்குகள் கிடைத்தன.

ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அமெரிக்க நாடாளுமன்றம் மூன்று மாதங்களுக்கு முன்னர் இது போன்ற பிரேரணையை நிராகரித்திருந்தது.

இப்பொழுது குறைந்த பெரும்பான்மையுடன் அங்கீகரித்துள்ளது.

இந்த இராணுவஉதவி அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் ஊடாக கிளர்ச்சிப்படைகளுக்கு வழங்கப்படும்.

1981—1984 வரை அமெரிக்கா; நிக்கரகுவா கிளர்ச்சிப் படைகளுக்கு அளித்துவந்த இராணுவ உதவி, அமெரிக்க நாடாளுமன்றத்தின் எதிர்ப்புக் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிக்கரகுவா அரசுக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிப் படைகளுக்கு இராணுவ உதவி அளிப்பதை பெரும்பாலான அமெரிக்க மக்கள் எதிர்ப்பதாக வாஷிங்டனில் உள்ள பி பி சி செய்தியாளர் தெரிவித்தார்

நிக்கரகுவா ஜனாதிபதி ஒடேகோ, (இன்று வியாழக்கிழமை) மனகுவாவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க இராணுவ உதவி வழங்கும் முடிவைக் கண்டித்தார்.

அதிபர் றேகன் ஒரு பயங்கரவாதி. ஹிட்லரின் வாரிசு — இப்படி அவர் கூறினார். (எ)

### றம்பால் : ராஜீவ் சந்திப்பு

புதுடில்லி, ஜூன் 26

காமன்வெல்த்பொதுச் செயலர் டாக்டர் றம்பால் நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார், தென் ஆபிரிக்காவின் அண்மை நிலவரம் குறித்து இருவரும் விவாதித்தனர். (இ-ஒ)

### கர்நாடகத்தில் அமைச்சர்கள் ராஜினமா !

பெங்களூர், ஜூன் 26

கர்நாடகத்தில் அமைச்சரவை மாற்றி அமைக்கப்படுவதற்கு வசதியாக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேயின் அமைச்சரவையில் 28 பேர் தமது ராஜினமாவைச் சமர்ப்பித்தனர் கர்நாடக அமைச்சர்கள் தாமாகவே தமது பதவிகளை ராஜினமாச் செய்வது இது இரண்டாவது தடவையாகும்.

இந்த அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-ஒ)

### நடராஜர் சிலை மீட்பு

சென்னை, ஜூன் 26

திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளநாடு ஆலயத்தில் சென்ற வருடம் களவுபோன பிரமாண்டமான நடராஜர் சிலையை திருச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.

14 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாக கருதப்படும இந்த ஐம்பொன்சிலை பல லட்சம் ரூபா மதிப்புடையதாகும் (இ-ஒ)

### பாரதீய ஜனதா வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 26

சண்டிகாரை பஞ்சாபிற்கு மாற்ற வேண்டாம் என்று பாரதீய ஜனதா கட்சி மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தியுள்ளது. (இ-ஒ)

### ஏ. வி. எம். ராஜன் மதம் மாறினர்

சென்னை, ஜூன் 26

பிரபல திரைப்பட நடிகர் ஏ. வி. எம். ராஜன் கிறிஸ்தவ மதத்தைத்தழுவியுள்ளார். (இ-ஒ)

## வெளி உலகில்

### தொழிலாளர் ஸ்தாபன மாநாடு

ஜெனீவா, ஜூன் 26

இனவேற்றுமை, வேலைவாய்ப்பின்மை மற்றும் வளரும் நாடுகளின்கடன் பிரச்சினை ஆகியவற்றை உடனடியாகப் போக்க உலகளாவியநடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஜெனிவாவில்முடிவுற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் 72ஆவது கூட்டத்தொடர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-ஒ)

### தென் ஆபிரிக்கா மீது பிரிட்டன் கண்டனம்

லண்டன், ஜூன் 26

தென் ஆபிரிக்காவில் இருவாரங்களுக்கு முன்னர் அமுலுக்கு வந்த நெருக்கடி நிலையைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளது.

தொழிற் சங்கத் தலைவர்களும் சமுதாயத்தின் பிரமுகர்கள் பலரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது பற்றியும், பாதுகாப்புப் படையினரின் அட்டூழியங்கள் பற்றியும் பிரிட்டன் தனது ஆழ்ந்த கவலையை தென் ஆபிரிக்க அரசுக்கு தெரிவித்துள்ளது (இ-ஒ)

### ரெலோவுக்கு கருணாநிதி அன்பளிப்பு

சென்னை, ஜூன் 26

தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு (ரெலோ) மேலும் 50,000 ரூபா நிதி உதவி வழங்கப்படும் என திமுக தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சமீபத்தல் தமது பிறந்த நாளின்போது தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கெனத் திரட்டப்பட்ட நிதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை அந்த இயக்கத்தினர் பெற்றுக் கொள்ளாததால் அந்தத் தொகையான 50 000 ரூபாவும் ரெலோவிற்கு வழங்கப்படும் என அறிக்கையொன்றின் மூலம் திரு மு. கருணாநிதி தெரிவித்தார். (இ-ஒ)

### பூட்டாசிங் உறுதி

புதுடில்லி ஜூன் 26

தீவிரவாத நடவடிக்கைகளை தடுப்பதற்காக புதிய செயல் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படும் என்று பஞ்சாபில் பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து டில்லி வந்த மக்களிடம் உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் உறுதி அளித்தார்.

பஞ்சாபில் அமைதியை ஏற்படுத்தி, இயல்பான நிலைக்குக் கொண்டுவரவும், மக்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வை அகற்றவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர். (இ-ஒ)

## இலங்கை அகதிகளுக்கு 171 இடங்களில் முகாம்கள்

சென்னை, ஜூன் 26

தமிழ் நாட்டில் இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்காக 171 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்காக நாள்தோறும் ஒரு லட்சத்து பதினையாயிரம் ரூபா செலவழிக்கப்படுகிறது.

மாநில மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. ராமசாமி இதனைத் தெரிவித்தார்.

கன்யாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டத்தைத் தவிர ஏனையவற்றில் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் சராசரி 30 000 பேர் வரையில் தினசரி வைத்திய கண்காணிப்புகளுக்கு ஆளாக வேண்டியிருப்பதாகவும், அவர் தெரிவித்தார். (இ-ஒ)

### சரத்துக்கு யாழ் குடா நாடே துக்கம் அனுஷ்டித்தது

**கலவான புதிய எம்.பி உரை**

கொழும்பு, ஜூன் 27

மறைந்த தலைவர் சரத் முத்தெட்டுவேகமவை நாட்டு மக்கள் அனைவரும் ஆதரித்தனர். யாழ் குடா நாடே அவரின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டித்தது

இப்படிச் சொன்னார், கலவானைத் தொகுதியின் புதிய எம்.பி திரு டி. யூ. குணசேகரா

நுவரெலியா புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திரு குணசேகரா பேசினார்.

தோட்டத் தொழிலாளருக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்தவர் சரத். துணிச்சலுடன் நாட்டு நன்மை கருதி கருத்துக்களை சரத் வெளியிட்டு வந்தார். சரத்துக்கு நிகர் வேறு அரசியல் தலைவர் இந்த நாட்டில் இல்லை.

இப்படி திரு. டி யூ குணசேகரா சொன்னார். (இ-எ)

### தோலகட்டி மரணம் நீதிவிசாரணை நடத்த அரசு முன்வருமா?

உடுவில். ஜூன் 27

வயாவிளானில் கத்தோலிக்க மதகுரு இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானது குறித்து நீதி விசாரணை ஒன்றை நடத்த அரசு முன்வருமா?''

சுன்னாகம் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர தந்தியில் இவ்வாறு கேள்வி எழுப்பி உள்ளது.

முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயற்சித்த சம்பவத்தை அரசு தோலகட்டி சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கை ஞாபகமூட்டுகிறது என்றும்--மதங்கள் மீதும் மக்கள் மீதும் உண்மையாகவே இரக்கமிருந்தால் உடனடியாக வண சகோதரர் வெனிஸ்லாஸின் மரணம் குறித்து நீதி விசாரணை நடத்த உத்தரவிடுமாறும் தந்தியில் கோரப்பட்டுள்ளது

தமிழ் பிரதேசங்களில் கோவில்களும், தேவாலயங்களும், பள்ளிவாசல்களும், பாடசாலைகளும் இராணுவத்தினரால் அழிக்கப்படும் அநியாயம் தொடர்கிறது என்றும் தந்தியில்குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-27)

# திருப்தியுடன் வாழ்வதே மனிதனின் பூரணத்துவம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளிய உரையிலிருந்து ஒரு பகுதி.

அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தோழனாய் இருந்து வழிகாட்டியது போல், சுந்தரருக்கு பரமசிவன் தோழனாய் இருந்து அற்புதங்களை எல்லாம் காட்டி ஆட்கொண்டார்.

இக்காலம் ஜனங்கள் இடையே அற்புதங்களைக் காட்டி வியக்க வைக்கக் கூடிய காலமாக இருக்கிறது.

ஆனால் இன்று அற்புதங்கள் காட்டும் எவரும் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய முறையில் அற்புதம் எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால் அன்றோ சுந்தரருக்கு பரமசிவன் காட்டியருளிய அற்புதத்தில் நெல்லை வண்டி வண்டியாகக் கொடுத்து அருளி ஜனங்களுடைய வறுமையை அகற்றினார் என்று சுந்தரர் வரலாறு கூறுகிறது

இறைவன் அன்று பெரிய புராணத்தில் உள்ள அடியார்களின் வரலாற்றை அடி எடுத்துக் கொடுக்கவில்லை என்றால், இன்று சேக்கிழார் பெருமானுடைய தமிழ்ச் சுவையை நம்மால் அனுபவித்து இருக்கமுடியாது.

சுந்தரர் இறைவனைப் பார்த்துப் பொன்னும் பொருளும் கேட்டுப் பெற்றதோடு இறைவனுடைய மேலான அருளையும் கேட்டுப் பெற்றார். சுந்தரர் கேட்பதை எல்லாம் இறைவனும் அருளினார். ஆனால் நாம் கேட்பதை எல்லாம் இறைவன் அருளுவதில்லை.



இறைவன் கொடுத்ததை எல்லாம் சுந்தரர் உலக மக்களுக்காக வழங்கினார். அதனால் இறைவனும் கொடுத்தார்.

இன்று நாம் இறைவனிடம் கேட்பதில் நம் குடும்பத்திற்காகக் கேட்பது கூடக் குறைந்து, நமது சுயதேவைக்கு வேண்டிய அற்ப பொருள்களைக் கேட்பதிலேயே நம்முடைய பிரார்த்தனை நின்று விட்டதினால், இறைவன் நாம் கேட்பதை, எல்லாம் கொடுப்பது இல்லை ஆனால் நமக்குத் தேவையுள்ளதை மட்டும் கொடுக்கிறான்.

இன்று குழந்தைகள் கேட்பதை எல்லாம் தாயார், தகப்பனார் கொடுப்பது இல்லை ... நமக்கு எல்லாம் தாய், தந்தையாயுள்ள இறைவன் நாம் கேட்பதை எல்லாம் கொடுத்து விட்டு நம்மை அல்லல் பட வைக்காமல் நமக்குத் தேவையுள்ளதை மட்டும் கொடுத்து நாம் அமைதியாக வாழ வழி செய்கின்றான்.

இறைவனுடையஅருள் பெற்றதற்கு அடையாளம் பொன்னும் பொருளும் கிடைப்பதோடு கூட அமைதியும் பெற வேண்டும். அதைத் தான் அன்று சுந்தரர் பெற்றார் இன்று நாமும் பெறவேண்டும்.

கேட்பது என்பது மனிதனுடைய உரிமை கொடுப்பது என்பது இறைவனுடைய தன்மை.

எவ்வளவு இருந்தாலும் நம்முடைய மனம் திருப்தி அடைவது இல்லை. ஆகவே கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும்.

நம்மைக் காட்டிலும் இன்னும் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்து மனதைத் திருப்தி செய்து கொள்ள வேண்டும்.

**ஞானக்கதிர்**

திருப்தியுடன் வாழ்வதுதான் மனித வாழ்வின் பூரணத்துவம். இந்த பூரணத்துவத்தைப் பெற பெரியோர்களுடைய வாழ்க்கையை அறிந்து அவர்கள் அருளிய பாடல்களைப் ... பெற வேண்டும்.

### தமிழர்கள் கைது

மட்டக்களப்பு, ஜூன் 27

வலையிறவு — வவுணதீவு பாலத்தில் வைத்து திங்களன்று அதிகாலை ஆயுதப்படையினர் 20க்கும் அதிகமான தமிழர்களைக் கைதுசெய்து கல்லடி முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

படுவான் கரைப் பகுதியில் இருந்து வந்தவர்களையேஆயுதபடையினர் விசாரணைக்காக அழைத்துச்சென்றனர். (இ.எ)


**வள்ளுவர் வழி**

குறள்:

அறன்நோக்கி ஆற்றுக்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை

பொருள்:

ஒருவர் நேரில் இல்லாது கண்டு பழிச் சொல் கூறுவோனுடைய உடல்பாரத்தை, 'இவனையும் சுமப்பதே எனக்கு அறம்' என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?



## சமய சந்நிதிகளில்

### புனித சின்னப்பர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

சொக்குவில் கிழக்கு புனித சின்னப்பர் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

ஞாயிறு காலை விசேட பூசைப்பலி இடம்பெறும் காலை8-30மணிக்கு திருச்சொரூபப்பவனியும்புனிதரின் ஆசியும் இடம் பெறும். (எ)

### புங்குடுதீவு அந்தோனியார் உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன் 27

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூலை 4 வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

'ஒடுக்கப்பட்டோருக்காகப் போராடுபவர்களுக்காகவும் அவர் தம் இலட்சியத்திற்காகவும் வேண்டுதல்' பூசை அன்று பிற்பகல் 4. 30 மணிக்கு இடம் பெறும்.

நாட்டில் சமாதானம், சமத்துவம், விடுதலை-நீதி கிட்ட வேண்டுதல் பூசையும் நற்கருணை வழிபாடும் ஜூலை 5 சனிக்கிழமை பிற்பகல் இடம்பெறும். (இ-எ)

## ஒற்றுமையாக வாழ வழி காண வேண்டும்

**திருமலை மாவட்ட மந்திரி கூறுகிறார்**

திருகோணமலை, ஜூன் 27

இராணுவ நடவடிக்கைகளில், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளில் நாம் தலையிடக்கூடாது இவற்றின் மத்தியில் நாம் அமைதியாக, இன ஒற்றுமையுடன் வாழும் வழியைக் காணவேண்டும்.

இப்படி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. எம் ஆரியரத்தின தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் திருகோணமலைக் கச்சேரியில் மாவட்ட சமாதான மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அச்சமயம் பேசுகையில்தான் அரச அதிபர் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

இம்மாநாட்டில் பிரசைகள் குழுக்கள், சமய நிறுவனங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டவர்.

திருகோணமலை நகரில் இனஒற்றுமையைப் பேணும் திட்டம் ஒன்றையும் அரசாங்க அதிபர் பிரதிநிதிகளிடம் விளக்கிச் சொன்னார். (இ-எ-150)

### முஸ்லிம்கள் கடையடைத்து துக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்நகரில் புதன்று முஸ்லிம் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன.

செவ்வாய்க்கிழமை ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக நடைபெற்ற கோஷ்டி மோதலின் போது கொல்லப்பட்ட மூவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலேயே கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

சில கடைகளிலும் வீதிகளிலும் கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (இ-10)

### நல்லூர் சாதனா பாடசாலை சாதனை

யாழ்ப்பாணம் ஜூன் 27

'யூனிசெப்' ஸ்தாபனம் யாழ் மாநகர சபையுடன் இணைந்து நல்லூர் கமுனரிப் பகுதிப் பாடசாலைகளின் மத்தியில் சுகாதாரம் சம்பந்தமாக நடத்திய பேச்சுப் போட்டியில் நல்லூர் சாதனா பாடசாலை மூன்று பிரிவுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது

நல்லூர் சாதனா பாடசாலை மாணவிகளான செல்வி த ஞானபூரணி கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தையும் செல்வி. த. தமயந்தி மத்திய பிரிவில் முதலாம் இடத்தையும் செல்வி ப. சாந்தினி மேற்பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bitsmans Institutes**
**MANIPAY**
3ஆவது பிரிவு எமது வழமையான Super Grade ஆசிரிய குழுவினால்
**O/L DAY CLASS**
சகல பாட முழு பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்: 1. 7. 86 காலை 7.30 மணி

# உதயன்

27-06—1986 வெள்ளிக்கிழமை

**Bitsmans Institutes**
**MANIPAY**
88 A/L தூயகணிதம் (திரிகோண கணிதம்)
பிரயோக கணிதம் (இயக்கவியல்)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஆசிரியர், திரு. A. பத்மநாதன்

இலங்கை இனப்பிரச்சினை:

# இந்திய அரசு பார்வையாளராக இருக்க முடியாது

## 'இந்து' நாளிதழ் கருத்து

சென்னை, ஜூன் 26

தமிழருக்கு எதிரான புதிய இராணுவ நடவடிக்கைகளில் இலங்கை அரசு இறங்கினால் இந்தியா அக்கறை இல்லாத பார்வையாளராக இருக்க முடியாது. இதை இந்தியா உலகுக்கும் இலங்கைக்கும் உணர்த்த வேண்டும்.

இப்படி 'இந்து' நாளிதழ் கருத்து வெளியிட்டுள்ளது.

தனது ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் 'இந்து' மேலும் கூறியிருப்பதாவது;

ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட்டியுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தமைக்காக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்த காரணங்கள் சரியானவையாகத் தோன்றவில்லை.

இனப்பிரச்சினையைத் திரு ஜெயவர்த்தன மூன்று வழிகளில் அணுகின்றார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியுள்ள கருத்து பெருமதியானது.

ஒன்று, இந்திய நல்லெண்ணத்தைப் பாவித்து தமிழர் குழுக்களுடன் பேசுவது—

இரண்டு, இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவது—

மூன்றாவது, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி பேச்சுக்களை நடத்துவது.

முதலாவது வழியில் சென்று தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதன் மூலம் இலங்கை தனது உயிரைக் காப்பாற்றி வருகிறது

சிதம்பரம் குழு கொழும்பு சென்று, திரும்பி விட்ட பின்னர் யாழ்குடா நாட்டில் இலங்கை அரசு தாக்குதல் நடத்தியது.

மீண்டும் யாழ்ப்பாணம் தாக்கப்பட விருப்பதாக அறிகுறிகள் தென்படுகின்றன இது கவலைக்குரியது

அப்பாவித் தமிழர் மீதான இராணுவ நடவடிக்கை அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைப் பாதித்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கைகள் இலங்கை அரசியலில் அவநம்பிக்கைக்குரிய பாத்திரமாக இருக்கும் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் செயல் திட்டங்கள் தான்.

வடக்கு, கிழக்கில் தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தம் என்று ஜே. ஆர்.— லலித் கம்பெனி கூறிவந்ததைத், தெற்கில் இடம் பெறும் தாக்குதல்கள் அபத்தமாக்கிவிட்டது.

இப்படி 'இந்து' கருத்து வெளியிட்டுள்ளது.

(இ-எ-2)

## தேவை
**பெண் உதவியாளர்கள்**

தொழிற்சாலையொன்றில் வேலை செய்வதற்கு 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு தெற்றிடமுள்ளது. கண்டுக்குளியிலிருந்து ஒரு மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக 28-6-86 சனிக்கிழமை காலை 9—11 மணிக்கிடையில் நேரில் வரவும்

dyn ads, 476, பிரதான வீதி, கண்டுக்குளி

## London Exams

iCMA Professional Stage II
Classes Commenc on 28-06-86
ICMA—A, B & Professional I
AAT, IAB — All Stages
Just Commenced
**RAPID Results Institute**
212, Kachcheri-Nallur Road, Jaffna.

## ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புகள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது. தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது. எது எப்படியானாலும் எமது தயாரிப்புகள் தொடர்ந்து கிடைக்கும். போலிகள்! கவனம். எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு. அதில் நேரம் 6.20 மணியைக் காட்டுகின்றது. ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும், இவ் இளவேனிற் காலத்தில் தோலகட்டி நெல்லிரசம் உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

ஏகப் பிரதிநிதிகள்

ஜோ. எகஸ்டன், செனித் மார்கட்டிங், யாழ்நகர். | செபமாலை தாசர்சபை, தோலகட்டி, வயாவிளான்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

### வரணி மிசன் விற்பனை நிலையம்

145. நவீன சந்தை; யாழ்நகர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 27—06—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number Q J 60 N 86

முஸ்லிம் பகுதி மோதல்:

## வானொலிச் செய்திக்கு முன்னாள் எம்.எம்.ஸி. மறுப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ் முஸ்லிம்கள் நால்வர் மைய அடக்கம் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வருகையில் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியில் அறிவிக்கப்பட்டதை யாழ் முஸ்லிம் பிரமுகர் ஒருவர் மறுத்திருக்கிறார்.

வியாழக்கிழமை காலை 6 30 மணிக்கு ஒலிபரப்பான செய்தி தொடர்பாக யாழ் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி உப அதிபருமான ஜனாப் க. மு. சாகுல் ஹமீட் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இங்குள்ள முஸ்லிம் இளைஞர் அமைப்பு ஒன்றைச் சார்ந்த சில இளைஞர்களுக்கும் வேறு சில முஸ்லிம் இளைஞர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலின்போதே இரு இளைஞர்களும் ஒரு பாடசாலை மாணவனும் கிறனேட் வீச்சுக்குப் பலியானதோடு மேலும் 9 பேர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் யாழ் வாழ் முஸ்லிம்களே தவிர வானொலியில் அறிவிக்கப்பட்டது போல் தீவிரவாதிகள் அல்லர்

குடாநாட்டில் வாழும் முஸ்லிம்களும் பிறசமூகத்தவர்களும் என்றும் போல் ஒருதாய் மக்களாக ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகிறோம் என்பதை இங்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்

வானொலியில் அறிவிக்கப்பட்ட செய்தி முஸ்லிம் தமிழ் மக்களிடையே மனக் கசப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்காக திரித்துக் கூறப்பட்டுள்ளது தெளிவாகிறது எனவே பிற பகுதியில் வாழ்பவர்கள் இந் நிலைப்பாட்டை உணர்ந்து கொள்ள வேண்டியது இக் காலகட்டத்தில் அவசியமானதொன்றாகும்.

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## யார் நிராகரிப்பி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதலாக மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் மாகாண மட்டத்தில் பரவலாக்கப்படுகின்றன.

✱ புதிய யோசனைகள் அமுல் செய்யப்பட்டாலும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டா எங்கெங்கு சட்டமும் ஒழுங்கும் பிழைக்கப்படுகிறதோ அங்கங்கு இராணுவ நடவடிக்கைகள் தொடரும்.

✱ அரசியல் கட்சிகள் மாநாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளே அழைக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் குழுவையும் அழைக்கும் எண்ணம் எமக்கு இல்லை

✱ பாரம்பரிய தாயகம் என்ற சித்தாந்தம் எப்போதோ நிராகரிக்கப்பட்டுவிட்டது. அந்தச் சித்தாந்தத்தைப் புறநீங்கலாக்கியே புதிய யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

✱ தேசிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழும் மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழும் இன விகிதாசாரப்படியே காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

✱ அரசியல் கட்சி மாநாட்டில் யுத்த நிறுத்தம் பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை.

✱ இப்போது மாநாட்டைப் பகிஷ்கரிக்கும் எவரும் இடைநடுவில் வந்து மாநாட்டில் கலந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படும்.

✱ சண்டையை முடித்துக்கொண்டு திட்டத்தை அமுல் செய்வதா அல்லது திட்டத்தை அமுல் செய்தபின் சண்டையை முடிப்பதா என்ற குழப்ப நிலைக்கே இடமில்லை. நாம் எமது திட்டத்தை அமுல் செய்வோம் சண்டைக்கு வருபவர்களையும் எதிர்த்துப் போராடுவோம்.

✱ எங்களுடைய திட்டத்தைப் பற்றி மக்கள் ஜனநாயக ரீதியிலும் அர்த்தமுள்ள ரீதியிலும் தெரிவிக்கும் கருத்துக்கு நாம் மதிப்பளிப்போம்.

✱ புதிய யோசனைகளை விளக்கி நாடு முழுவதிலும் நாம் பிரசாரம் செய்வோம் மகா சங்கத்தவர்களுக்கும் விளக்குவோம். (அ-உ)

## தோலகட்டி ஆசிரம பணி வழமை நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வயாவிளான் தோலகட்டி செபமாலை தாசர் சபை மீண்டும் தனது நற்பணிகளை தொடங்கி உள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும் புகழ் பெற்ற அவர்களின் குளிர்பான வகைகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

அவற்றின் தயாரிப்பு வேலைகள் புதிய இடத்தில் பாதுகாப்பான சூழலில் நடைபெறுகின்றன

(உ-5)

### கண்காட்சி

சாவகச்சேரி, ஜூன் 27

மட்டுவில் மகா வித்தியாலயக் கல்விக் கண்காட்சி இன்று நடைபெறுகிறது.

சாவகச்சேரி வைத்திய அதிகாரி திரு ரி சோமசுந்தரம். பொருட்காட்சியைத் திறந்து வைப்பார். (இ-31)

## பூஸா------

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூஸாவுக்குக் கொண்டு வருவதை நிறுத்தும்படி கொழும்பில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

அதைத் தொடர்ந்து கப்பல் நடுக்கடலில் நின்று நேற்றுக் காலை மீண்டும் திருமலைத் துறைமுகத்துக்கு வந்தது-

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட சுமார் 900 தமிழர்களும் திருமலைக்கடற்படைத் தளமுகாமில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஒருவரும் விடுதலை செய்யப்படவில்லை.

இதனிடையில் விசாரணைகளைத் துரிதப்படுத்த கொழும்பில் இருந்து விசேட பொலீஸ் கோஷ்டி ஒன்று நேற்றுத் திருகோணமலைக்கு வந்தது.

(உ-எ-150)

## புலிகளால் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், உடனடியாகவே மரணதண்டனை வழங்கப்பட வேண்டுமென கூட்டத்தில் உள்ளவர்கள் கூறியபோது அவர்கள் மத்தியில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் இயக்கப்பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாவது:-

இங்கு நடைபெற்ற சம்பவம் சாதாரணமான விடயமல்ல. இதற்குப் பல பின்னணிகள் உண்டு.

குண்டு வீசியவர்களிடம் ஒரு குண்டு மட்டுமல்ல பெட்டிக் கணக்காகக் குண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இக் குண்டுகள் தமிழீழ விடுதலையின் எதிரிகளால் வழங்கப்பட்டுள்ளன.

கொலைபற்றிய வானொலிச் செய்திக்கும், குண்டு வழங்கலுக்கும் நிறையத் தொடர்புகள் உள்ளன என்பதை நாம் கண்டுபிடித்துள்ளோம்.

இது ஒரு திட்டமிட்ட செயல்.

முஸ்லிம் மக்களையும் விடுதலை இயக்கங்களையும் அந்நியப்படுத்தி - முரண்பாடுகளை ஏற்படுத்துவது எமது எதிரியின் தந்திரமானது இன்னும் தொடரும் சாத்தியங்கள் உண்டு

இவ்விடயத்தில் நாம் ஊன்றிக் கவனம் செலுத்துகின்றோம்.

எதிரிகளால் வழங்கப்பட்ட பலகுண்டுகள் இன்னும் வெடிக்கலாம்.

இக் குண்டுகளை நாம் முதலில் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும்.

எம்மால் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டவருக்கும் இங்கு வெடித்த—வெடிக்காமல் இருக்கும் பல குண்டுகளுக்கும் தொடர்புகள் உண்டு

அவற்றை நாம் பெற்றுக் கொண்ட பின்பே தண்டனையை நிறைவேற்றவேண்டும்.

இப்பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களின் அங்கீகாரம் எமது தீர்ப்பிற்கு அளிக்கப்பட்டுள்ளது

உணர்ச்சி வசப்பட்ட சிலர் கூறுவது போல, எதையும் யோசிக்காமல், பின் விளைவுகளைப் பாராமல் நாம் நடக்க முடியாது ... [illegible] ... னார். (இ-119)

## முஸ்லிம்கள்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கள் முன் நிறுத்து"

"இன்று எம்மக்களுக்கு நாளை யாருக்கு"

"குற்றவாளிகளுக்கு மரணம்தான் தண்டனை";

"சி ஐ ஏ. சதியை முறியடிப்போம்"

"தமிழ் மக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களே"

"பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலை என்ன?"

இவ்வாறான சுலோக அட்டைகள் பலரால் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தில் வந்தவர்களில் சிலர் வேண்டாத சம்பவங்களில் இறங்க முற்பட்டபோது அது தடுக்கப்பட்டது ஒருவரின் வீட்டுக்கு கைக்குண்டு வீசப்பட்டது

ஊர்வலத்தை மறித்தும் அவ்விடத்தில் சூழ்ந்து நின்ற மக்களை அமைதிப்படுத்தும் விடுதலைப் புலிகள் ... [illegible] ... (இ-119)

## விளையாட்டரங்கு

முதலாம் பிரிவு உதைபந்தாட்டம்

## யாழ் இந்து வெற்றி!

### கொக்குவில் இந்து சோபிக்கவில்லை

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூன் 27

புதன்கிழமை நடைபெற்ற முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதை பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி பெரு வெற்றியீட்டியது.

இந்த அணி கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை 5—1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

அல்விதி இணைக்கள சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை அணிகளுக்கிடையே யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் 'நொக்அவுட்' முறையிலான உதை பந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாகவே இந்த ஆட்டம் நடைபெற்றது

ஆட்ட நேர இடைவேளைக்கு முன்னர் 3—0 என்ற கோல் அடிப்படையில் யாழ் இந்துக்கல்லூரி முன்னணியில் நின்றது.

யாழ் இந்துக் கல்லூரியின் சார்பில் கே. ராமேஸ்வரன் இரண்டு கோல்களையும், பி. பிரபாகரன் இரண்டு கோல்களையும், கே இளங்கோ ஒரு கோலையும் போட்டனர்.

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டிக்கு திரு ராகுலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. (உ7)

உதைபந்தாட்டம்

## உலக கிண்ணம் யாருக்கு?

### ஜேர்மனுக்கா? ஆர்ஜென்ரீனாவுக்கா?

மெக்ஸிக்கோ, ஜூன் 26

உதைபந்தாட்டத்திற்கான உலகக் கிண்ணம் இம்முறை யாருக்குக் கிடைக்கும்?

மேற்கு ஜேர்மன் அணிக்குக் கிடைக்குமா? அல்லது ஆர்ஜென்ரீனா அணிக்கு கிடைக்குமா?

ஞாயிற்றுக்கிழமை இரவு உலகக் கிண்ணம் யாருக்கு என்பது தெரிந்து விடும்.

நேற்று மாலை நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் மேற்கு ஜேர்மன் அணி பலம் வாய்ந்த ஐரோப்பிய சாம்பியனான பிரான்ஸ் அணியை 2 0 என்ற கோல் கணக்கிலும் —

ஆர்ஜென்ரீனா அணி பெல்ஜியம் அணியை 2-0 என்ற கோல் கணக்கிலும் தோற்கடித்து இறுதியாட்டத்திற்குத் தெரிவாகின.

அரையிறுதியில் தோல்வியடைந்த பிரான்ஸ் பெல்ஜியம் அணிகள் உலக கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாவது இடத்தைப் பெறுவதற்கான மோதலில் சனிக்கிழமை ஈடுபடும் ஞாயிற்றுக் கிழமை இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மன், ஆர்ஜென்ரீனா அணிகள் மோதும். (உ)

## திருமலையில்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சாம்பல் தீவினை சுற்றிவளைப்பதற்காக இராணுவம் வந்தபோது எமது தரப்பினர் கடுமையாக நேரடி மோதலை தொடுத்ததில் சில சுறுப்புச் சட்டைக்காரர்கள் பலியானதுடன் பலர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவம் பின்வாங்கியது. எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-எ-150)

## கிளிநொச்சி ---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

சில் உள்ள அரச அலுவலகங்கள் அனைத்தையும் பரந்தனுக்கு இடம்மாற்றம் செய்ய கொழும்பில் மேலிடம் முடிவு எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை கிளிநொச்சித் தபால் நிலையம் கடந்த புதன்கிழமை (25-6-86) தொடக்கம் பரந்தன் தபால் நிலையத்தில் இயங்குகின்றது

இராணுவ அதிகாரிகளின் அங்கீகாரத்துடனேயே இந்த இடம்மாற்றம் செய்யப்பட்டதாக அறிய வந்தது

கிளிநொச்சி தபால் நிலையக் கட்டடத்தைத் தற்போது இராணுவம் பொறுப்பேற்றுள்ளது. முகாமின் ஒரு பகுதியாக அது மாறலாம்.

## கண்ணி வெடி-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணி வெடித் தாக்குதல் நிகழ்ந்தியதில் டிரக் முற்றாக சிதைந்தது.

இத் தாக்குதலின் போது அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர் கொல்லப்பட்டவர்களில் 6 ஊர்காவல் படையினர் அடங்குவர். மொத்தமாக இதில் 22 பேர் பயணம் செய்தனர்.

புதன் காலை ஒலுக்குளம்—பூவை வீதியில் பஸ் ஒன்றில் இராணுவத்தினரோடு ஊர்காவல் படையினரும், சிங்கள குண்டர்களும் வந்து கொண்டிருந்த போது எமது வீரர்கள் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தினர்.

இதில் 6 இராணுவத்தினரும் 10 ஊர்காவல் படையினரும், 16 சிங்கள குண்டர்களும் அந்த இடத்திலேயே பலியாகினர். மேலும் 6 பேர் கடுமையான காயங்களுக்குள்ளாகினர். (உ)

## திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். 4ஆம் குறுக்குத் தெரு ஆதிரை புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் மறைந்த தலைவர் திரு. கா. விஸ்வலிங்கத்தின் புகைப்படம் இன்று பிற்பகல் 2 மணியளவில் திரை நீக்கம் செய்யப்படவிருக்கின்றது

### கருத்தரங்கு

பருத்தித்துறை, ஜூன் 27

அல்வாய் வடக்கு, அல்வாய் மேற்கு, அல்வாய் தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 45 உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறும். (இ-118)

## பிரயாண ஒழுங்குகள்
(விசா வசதியுடன்)

ஈராக்: ஆஸ்பத்திரி, விமானநிலையத்தில் கிளீனேஸ், காப்பாளர்களுக்கு பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

சிரியா: கம்பனி தொழிலாளர்களாகச் செல்வதற்கு உடன் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

லெபனன்: கிளீனேஸ் உதவியாளர்களுக்கு இரண்டு வாரத்தில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

விபரங்களுக்கு,

**R. K. பரமசுவாமி**
ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை
இணுவில் மேற்கு.

## மீண்டும் ஆரம்பம்!
## யாழ் - கொழும்பு
விமான சேவை

ஆசனப் பதிவுகளுக்கு:
Mack Communications & Travels
இல 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 24791, 24836

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org